Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, SEPTEMBER 12, 2023

செவ்வாய்க்கிழமை, செப்டெம்பர் 12, 2023 | ஒளி: 09 கதிர்: 082 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு★ | FREE




## ஐஎம்எப் குழுவினருடன் வியாழன் முதல் பேச்சு

நீட்டிக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் முதல் மீளாய்வு குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் (ஐஎம்எப்) குழுவினருடன், உள்ளூர் அதிகாரிகள், வியாழக்கிழமை (14) முதல் கலந்துரையாடல்களை ஆரம்பிக்கவுள்ளனர் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய உறுதிப்படுத்தியுள்ளார்.

கடன் செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதுடன், நாணய நிதியத்தின் குழு, செப்டெம்பர் 27ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருக்கும்.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாணய நிதியக் குழுவுடன் கலந்துரையாடல்களை ஆரம்பிக்கவுள்ளார் என்பதுடன், இரண்டு வார இறுதியில், நாணய நிதியக் குழு ஜனாதிபதியுடன் மற்றொரு சுற்று கலந்துரையாடலை நடத்தவுள்ளது.

இதேவேளை, இலங்கை மத்திய வங்கி, திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் குறித்த குழு கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளது.

48 மாதங்கள் நீட்டிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் சுமார் 3 பில்லியன் அமெரிக்க டொலர் இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களுக்காக வழங்குவதற்கு நிதியத்தின் பணிப்பாளர் சபை, மார்ச் மாதம் அனுமதி வழங்கியிருந்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் மதிப்பாய்வைத் தொடர்ந்து, இலங்கைக்கு சுமார் 338 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டுக்கு யார் உழைக்க வேண்டும் என்பதை

# தீர்மானிக்க வேண்டிய தருணம் எழுந்துள்ளது



வர்த்தமானிகள், சுற்றறிக்கைகள், குழுக்களுக்கு என்று மட்டுப்படாமல் நடைமுறையில் நாட்டுக்கு யார் உழைக்க வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டிய தருணம் எழுந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

காலி மாகாண பிரிவுக்கான பிரதி பிரதம சங்கநாயக்க தேரர் பிரேமரத்ன நாயக்க தேரருக்கு பதவிக்கான நற்சான்றிதழ் பத்திரம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விகாரைகளின் அபிவிருத்தி முக்கியமில்லை என்று ஒரு கருத்தோட்டம் உருவாகி வருவதாகவும், விகாரைகளை மையமாக வைத்து நன்கொடையாளர்கள் மற்றும் செல்வந்தர்களின் உதவியுடன் தூபிகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்தை தாம் செயற்படுத்தினாலும், அதை விமர்சித்து சமூக வலைதளங்கள் மூலம் சேறுபூசும் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

அரசாங்க நிதி இதற்குப் பயன்படுத்தப்படவில்லை என்பதால் சில பௌத்தர்கள் கூட இதை விமர்சித்தார்கள் என்றும், இந்தக் கபட பொறாமைத்தனத்தால் சம்புத்த சாசனத்தை ஒரு போதும் பாதுகாக்க முடியாது என்றார்.

தொடர்ச்சி P2



மனித புதைகுழி அகழ்வில்

## ஊடகங்களுக்கு கட்டுப்பாடு; உண்மைகள் மறையுமா?

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு நடவடிக்கையில் ஊடகங்களுக்கு புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள காரணத்தால் அகழ்வு பணிகளில் உண்மையான விடயங்களை ஊடகங்களுக்கு வழங்குவார்களா? மக்களுக்கு உண்மையான விடயங்கள் தெரிய வருமா? அல்லது மூடி மறைக்கப்படுமா போன்ற கேள்விகள் மக்கள் மத்தியிலும், ஊடகவியலாளர்கள் மத்தியிலும் எழுந்துள்ளன.

தொடர்ச்சி P2





கொக்குத்தொடுவாய் அகழ்வுப் பணிகளை

## மூன்று எம்.பிக்கள் உட்பட பலர் பார்வையிட்டனர்

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் ஐந்தாவது நாளாக திங்கட்கிழமை (11) இடம்பெற்ற நிலையில் எம்.பிக்கள் மூவர் உள்ளிட்ட பலர் பார்வையிட்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி காண்டீபன் ஆகியோர் அகழ்வுப் பணிகளை பார்வையிட்டனர்.

தொடர்ச்சி P2



துறைமுகங்களில்

## தேங்கிக் கிடக்கும் 965 கொள்கலன்கள்

இலங்கை சுங்க திணைக்களத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ள, பல்வேறு பொருட்களைக் கொண்ட 965 கொள்கலன்கள், துறைமுக முனையங்கள் மற்றும் சுங்க பரிசீலனை கூடங்களிலும் தேங்கிக் கிடப்பதாக பாராளுமன்றத்தின் வழிவகைகள் பற்றிய குழு கண்டறிந்துள்ளது.

தொடர்ச்சி P2

## விமான சின்னத்தில் அரசியல் பிரவேசம்




விமான சின்னத்தில் தேர்தலில் போட்டியிடும் மௌபிம ஜனதா கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள இலங்கையின் முன்னணி வர்த்தகரான திலித் ஜெயவீர, உத்தியோகபூர்வமாக அரசியலில் பிரவேசித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## கஹவத்தை சம்பவம் போல் இனி எங்கும் நடக்கக்கூடாது

### ஒற்றுமை வேண்டும் என்கிறார் ஜீவன்



இரத்தினபுரி, கஹவத்த பெருந்தோட்ட நிறுவனத்துக்கு உட்பட்ட வெள்ளந்துரை தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவம்போல் இனி எங்கும் நடக்கக்கூடாது என்பதால்தான் மலையக மக்களுக்கு காணி உரிமை பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அனைத்து மலையக அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும்

தொடர்ச்சி P2

## வடக்கு, கிழக்கில் மதவாதம்; மலையகத்தில் இனவாதம்

### அரசாங்கத்தின் திட்டமிட்ட செயலா என இராதா கேள்வி



■ டி.ஷங்கீதன்

வடக்கு, கிழக்கு பகுதிகளில் மதவாதத்தை கையில் எடுத்துக் கொண்டு, அதனை கட்டுப்படுத்தாமல் கண்டு கொள்ளாமல் இருக்கும் அரசாங்கம், மலையகத்தில் பெருந்தோட்ட கம்பனிகளில் காடையர்களின் அட்டகாசத்தையும் கட்டு

தொடர்ச்சி P2

## திடீர் வேலை நிறுத்தத்தால் ரயில் சேவைகள் பாதிப்பு



இலங்கை ரயில்வே திணைக்களத்தின் ஊழியர்களால் திங்கட்கிழமை (11) நண்பகல் வரை முன்னெடுக்கப்பட்ட திடீர் வேலை நிறுத்தத்தால் பல ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

காலை முதல் முன்னெடுக்கப்பட்ட வேலை

தொடர்ச்சி P2

## கேரள முதலமைச்சரை சந்தித்தார் செந்தில்



இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், கேளர முதலமைச்சர் பினராய் விஜயனை சந்தித்தார்.

கேரள முதலமைச்சர் அலுவலகத்தில் திங்கட்கிழமை (11) இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் கேரளாவுடன் இணைந்து கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா அபிவிருத்திகளை மேற்கொள்வது குறித்து கலந்துரையாடப்பட்டது.

மேலும், 1970ஆம் ஆண்டு இலங்கையில் உள்ள 1,480 மலையக குடும்பங்கள் கேரளாவில் மீள்குடியேற்றப்பட்டனர்.

தொடர்ச்சி P2



கரையோர பாதுகாப்பு விவகாரம்

## ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட குழுவினர் விஜயம்

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் அழைப்புக்கு அமைய, கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காகவும் கடல்சார் பாதிப்புகள் மற்றும் இழப்பீடு பெற்றுக்கொள்ளும் நடைமுறைகள் உள்ளிட்டவற்றை தெளிவுபடுத்துவதற்காகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட குழுவொன்று நாட்டுக்கு வருகை தந்துள்ளது.

போதுமான தொழில்நுட்ப அறிவின்மையால் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தின் பின்னர் நாட்டுக்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டதாக தெரிவித்த அதிகார சபை, ஐரோப்பிய ஒன்றியத்தின் தலையீட்டின்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஊடகங்களுக்கு கட்டுப்பாடு; உண்மைகள் மறையுமா?

ஊடகவியலாளர்கள், அகழ்வுப்பணி காலை ஆரம்பிக்கும் போதும், மதிய உணவு நேரம், மாலை நிறைவடையும் போதே அருகில் சென்று வீடியோ, புகைப்படங்கள் எடுத்து செய்தி சேகரிக்க முடியும் எனவும் ஏனைய நேரங்களில் செய்தி சேகரிக்க அனுமதி இல்லை எனவும் முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரி க.வாசுதேவா கட்டுப்பாடு விதித்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியானது பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஐந்தாம் நாளாக திங்கட்கிழமையும் (11) தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய (11) அகழ்வு பணியின் இறுதியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா மூன்று உடற்பாகங்கள் மீட்கப்பட்டதாகவும் ஏற்கெனவே மீட்கப்பட்ட இரண்டு உடற்பாகங்களுடன் ஐந்து உடற்பாகங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த பகுதியில் உடலங்கள் ஒன்றன் மேல் ஒன்றாக நெருக்கமாக குவிந்து கிடப்பதனால் சரியாக எத்தனை உடலங்கள் அடையாளப்படுத்தப்பட்டு உள்ளது என்பது தொடர்பான தகவல்களை தெரிவிக்க முடியாது உள்ளது என தெரிவித்தார்

இவ்வாறான நிலையில் அகழ்வு பணிகள் தொடர்ந்து நாளைய தினமும் முன்னெடுக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தீர்மானிக்க வேண்டிய தருணம் எழுந்துள்ளது

கடந்த காலங்களில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளைப் பெறுவதற்கும் அரச அதிகாரத்தைப் பெறுவதற்கும் பௌத்தம் பயன்படுத்தப்பட்டது என்றும், இவ்வாறு செயற்படக் கூடாது என்றும் தெரிவித்த அவர், அரசியலமைப்பில் கூட பௌத்த மதத்திற்கு சிறப்பிடம் உண்டு என்று கூறப்பட்டாலும் அது முறையாக செயற்படுத்தப்படுவதில்லை என சுட்டிக்காட்டினார்.

நாட்டின் தலைவர் உட்பட ஏனையவர்களும் மிக உயர்ந்த நாட்டின் சட்டங்களையும் மீறி மிஹிந்தலை புனித பூமி, திம்புலாகல விகாரை உட்பட பல மத வழிபாட்டுத் தலங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு சிவப்பு எச்சரிக்கை பத்திரங்கள் கூட அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

வாயாடி பௌத்தர்கள் உருவாகிறார்களே என்றாலும் நாட்டுக்கு தேவைப்படுவது நடைமுறை பௌத்தர்களே என்றும், தற்போதைய எதிர்க்கட்சி அரசியல் இலக்குகளை அடைய மதத்தை பயன்படுத்தாது என்றும் கூறினார்.

சமூகங்களுக்கும் மதங்களுக்கும் இடையே அமைதியான சூழல் நிலவும்போது, தேசிய பாதுகாப்பு கூட பாதுகாக்கப்படுவதாகவும், மலட்டுக் கொத்து, மலட்டு அறுவை சிகிச்சை பற்றி பேசும் போது அது பொய்ப்பித்துப் போவதாகவும், கடந்த கால ஆட்சியாளர்கள் தேசிய ஒற்றுமைக்குப் பதிலாக தேசிய ஒற்றுமையீனத்தைப் பரப்பி மத, இனங்களுக்கு இடையே வெறுப்பை ஏற்படுத்தியதாகவும் குறிப்பிட்டார்.

தேசிய ஒருமைப்பாடு, இறையாண்மை, பிரிவினைவாதமற்ற தன்மை என்பன வெறும் காகிதங்களுக்குள் மட்டுப்படுத்தப்படாமல் ஒவ்வோர் இலங்கையர்களின் இதயத்திலும் இருக்க வேண்டும் என்றும், அப்போதுதான் நாடு பாதுகாப்பாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் இலங்கைப் பிரஜையாக மாத்திரமன்றி உலகளாவிய பிரஜையாக உருவாக்கும் பயணம் சிறுவயதிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

மத வழிபாட்டுத் தலங்களில் நாட்டின் இளைஞர்களுக்கு புதிய தொழில்நுட்பத்தை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் அதேவேளை, புதிய தொழில்நுட்பத்தின் மூலம் உயர்கல்வியை வழங்கும் நிலையங்கள் நிறுவப்படும் என்றும் தெரிவித்தார்.

நாடு சீர்பெற வேண்டுமானால் நாமும் சீர்பெற வேண்டும் என்றும், யார் உண்மையிலேயே மக்களுக்காக உழைக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் திறன் நாட்டு மக்களுக்கு இப்போது உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இது வர்த்தமானிகள், சுற்றறிக்கைகள், குழுக்களுக்கு என்று மட்டுப்படாமல் நடைமுறையில் நாட்டுக்கு யார் உழைக்க வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டிய தருணம் எழுந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## விமான சின்னத்தில் அரசியல் பிரவேசம்

தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தின் புதிதாகப் புதுப்பிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிப் பட்டியலுக்கு அமைய இந்தத் தகலல் உறுதியாகியுள்ளது.

மௌபிம ஜனதா கட்சியின் உத்தியோகத்தர் சபை பட்டியலுக்கு இணங்க தலைவராக திலித் ஜயவீர பெயரிடப்பட்டுள்ளதுடன், கட்சியின் சிரேஷ்ட தலைவராக ஹேமகுமார நாணயக்கார நியமிக்கப்பட்டுள்ளனர்.

முன்னணி வர்த்தகர் ஒருவர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மூன்று எம்.பிக்கள் உட்பட பலர் பார்வையிட்டனர்

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் மற்றும் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் வருகைதந்து அகழ்வுப் பணிகளை பார்வையிட்டனர்.

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த புதன்கிழமை (06) உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் ஐந்தாம்நாள் அகழ்வாய்வுகள் முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரி க.வாசுதேவா, தடயவியல் பொலிசார், கிராம சேவையாளர் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் அகழ்வுப் பணிகளை பார்வையிட்டனர்.

## வடக்கு, கிழக்கில் மதவாதம்; மலையகத்தில் இனவாதம்

கொள்வதாகத் தெரியவில்லை என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

திங்கட்கிழமை (11) அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இது அரசாங்கத்தின் திட்டமிட்ட செயற்பாடா?என்ற சந்தேகத்தை எழுப்புவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, ‘இரத்தினபுரி சம்பவம் என்பது ஒரு சாதாரண விடயமாக பார்க்க முடியாது. ஏனெனில் 1998 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி காடையர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட சம்பவத்தால் ராசகலை, வெல்லவல, அகஸ்லான்ட், வேவல்வத்தை மக்கள் தங்களுடைய வீடுகளையும் உடைமைகளையும் இழந்து வீதிகளுக்கு வந்தனர்.

அன்று (செப்டெம்பர் 24) நான் குறித்த பகுதிகளுக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரடியாக பார்த்தேன். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கினோம். எனவே அதன் தாக்கம் எனக்கு நன்றாக தெரியும்.

எனவே இந்த விடயத்தை சாதாரணமாக பாரக்க முடியாது. பட்டப்பகலில் காடையர்கள் கூட்டமாக வந்து தாக்குதல் நடத்திவிட்டு செல்கின்றார்கள் என்றால் அதற்கு அனுமதி கொடுத்தது யார்? தோட்ட நிர்வாகம் செய்கின்றார்களா?அல்லது காடையர்களை வைத்துக் கொண்டு அராஜகம் செய்து கொண்டிருக்கின்றார்களா?

இதனையும் அரசாங்கம் கண்டும் காணாமல் இருக்கின்றது. மாத்தளை சம்பவம் நடைபெற்றவுடன் பலரும் இது தொடர்பாக பேசினார்கள். அத்தோடு அதன் கதை முடிந்துவிட்டது. அரசாங்கமும் கண்டு கொள்ளவில்லை.

எனவே இந்தச் சம்பவங்களின் பின்னால் அரசாங்கம் இருக்கின்றதோ என்ற ஒரு சந்தேகம் எனக்கு இருக்கின்றது. இது தொடர்பாக உரிய கவனம் செலுத்தி ஜனாதிபதி தலையீட்டுடன் உடனடியாக ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்ய வேண்டும்.

அந்தக் கூட்டத்தில் அனைத்து பெருந்தோட்ட கம்பனிகளும் பங்குபற்ற வேண்டும். அத்துடன் அனைத்து தொழிற்சங்கங்கள் வடகிழக்கு உட்பட அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்குபற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறு செய்யாவிட்டால் இது தொடர்பாக அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் இணைத்துக் கொண்டு ஒரு கலந்துரையாடலை ஏற்படுத்தி அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதோடு இந்த விடயத்தை சர்வதேசம் வரை கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதற்காக எந்த ஒரு தரப்பினருடனும் இணைந்து செயற்படுவதற்கு மலையக மக்கள் முன்னணி தயாராக இருக்கின்றது” என்றுள்ளது.

## திடீர் வேலை நிறுத்தத்தால் ரயில் சேவைகள் பாதிப்பு

நிறுத்தம் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையை தொடர்ந்து வாபஸ் பெறப்பட்டது.

இதேவேளை, பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து திங்கட்கிழமை (11) நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளதாக ரயில்வே பொறியியலாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

தாமதமாகிவரும் தரம் உயர்வை விரைவுபடுத்துமாறு கோரி வந்த போதிலும், அதற்கான உரிய பதில் கிடைக்காத காரணத்தினால் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ள சங்கம், இது குறித்து அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

## தேங்கிக் கிடக்கும் 965 கொள்கலன்கள்

நிலுவையில் உள்ள சுங்க விசாரணைகள், இறக்குமதியை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கான விதிமுறைகள் மற்றும் நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகள் காரணமாக குறித்த கொள்கலன்கள் தேங்கியுள்ளதாக குறித்த குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுங்க மேன்முறையீட்டு நடைமுறை அதிக காலத்தை எடுத்துக் கொள்ளும் என்பதாலும் இது ஒரு நீண்ட செயல்முறை என்பதாலும் இது சரியான நேரத்தில் தீர்வைத் தேடும் இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களை விரக்தியடையச் செய்துள்ளதாக குழு தெரிவித்துள்ளது.

சுங்கத்தின் விசாரணைகள் மற்றும் மேல்முறையீடுகள் குறுகிய காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என்றும் குறித்த குழு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை முதலீட்டுச் சபை, விமான நிலையங்கள் போன்ற அரச நிறுவனங்களுக்கும் சரக்கு மற்றும் அரச நிறுவனங்களுக்கும் விரைவாக அனுமதி வழங்குவதற்காக அனைத்து அரச நிறுவனங்களையும் இணைக்க தேசிய ஒற்றைச் சாளரத்தை நடைமுறைப்படுத்தவும் குழு பரிந்துரைத்துள்ளது.

இந்த அமைப்புடன் இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் ஏனைய தொடர்புடைய அதிகாரிகள் இணைக்க முடியும் என்றும் குழு பரிந்துரை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## களுவத்தை சம்பவம்போல் இனி எங்கும் நடக்கக்கூடாது

என்ற நிலைப்பாட்டிலேயே நாமும் இருக்கின்றோம் என்றும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

‘வெள்ளந்துரை தோட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு நீதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள மாணவி பல்கலைக்கழகம் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படும், புலமைப்பரிசிலொன்றையும் வழங்கவுள்ளோம்.

அந்தக் குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு வேலை வழங்கப்படும் என தோட்ட நிர்வாகம் உறுதியளித்துள்ளது. இதனை நாம் எழுத்துமூலம் கோரியுள்ளோம்.

இச்சம்பவத்தை வைத்துக்கொண்டு நாம் அரசியல் நடத்த முற்படவில்லை. மக்களுக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பதே எமது நோக்கம். மலையக அரசியல்வாதிகள் கண்டனம் தெரிவிக்கின்றனர், ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரப்படும் என ஓர் அரசியல்வாதி கூறுகின்றார்.

இப்படியான பிரச்சினைகள் பற்றிபேசி தீர்வைக்காணவே ஜனாதிபதியுடன் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அதில் பங்கேற்காமல் நடை பயணம் சென்றனர்.

ஒற்றுமையாக பயணிக்க வேண்டும் என்பதற்காக அனுசரித்து செல்கின்றோம். மக்களுக்காக பொறுமை காக்கின்றோம். எனவே, மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மலையக அரசியல்வாதிகள் ஒன்றுபட வேண்டும்.

சிவில் அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் நாம் பேச்சு நடத்தவுள்ளோம். காணி உரிமையை பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன’ என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கேரள முதலமைச்சரை சந்தித்தார் செந்தில்

இவர்கள் ஆர்பிஎல் நிறுவனத்திலும், கேரளா வன அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திலும் தொழில்புரிகின்றனர். அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துவரும் பணிகளுக்கு கேரள முதலமைச்சர் பிரனய் விஜயன் வாழ்த்துக் கூறியதுடன், ஆளுநர் செந்தில் தொண்டமான், இலங்கைக்கு வருகைதருமாறு விடுத்த அழைப்பை ஏற்று இலங்கை வருவதாகவும் உறுதியளித்தார்.

## கிழக்கு கடற்பரப்பில் சிறிய நில நடுக்கம்

மட்டக்களப்பில் இருந்து 310 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள கிழக்கு கடற்பரப்பில் 4.65 மெக்னிடியூட் அளவிலான நில நடுக்கம் பதிவாகியுள்ளதாக புவிசரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

அதிகாலை 1.30 மணியளவில் மட்டக்களப்பு கடற்பரப்பில் இருந்து 310 கிலோ மீட்டர் தொலைவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாகவும் இதனால் இலங்கைக்கு எந்தவொரு தாக்கமோ, சுனாமி அபாயமோ ஏற்படவில்லை என பணியகம் குறிப்பிட்டது.

ரிக்டர் அளவுகோலில் 6.5 அல்லது 7 ரிக்டர் அளவில் நிலநடுக்கங்கள் மட்டுமே சுனாமி அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக பணியகம் குறிப்பிட்டுள்ளதுடன், நிபுணர்களின் அறிவுரைகளை பொதுமக்கள் கவனத்தில் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளது.

கடந்த காலங்களில் இலங்கையின் சில பகுதிகளில் இவ்வாறான சிறிய அளவிலான நில அதிர்வுகள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தோ-அவுஸ்திரேலிய கண்டத்தட்டுகளின் நகர்வு காரணமாக எதிர்காலத்தில் பெரிய நிலநடுக்கங்களை இலங்கை எதிர்பார்க்க முடியும் என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

## ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட குழுவினர் விஜயம்

பின்னர் நாட்டின் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்படும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் கரையோரப் பகுதிகளை பாதுகாப்பது தொடர்பில் 3 செயன்முறைகளின் ஊடாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் இந்நாட்டு அதிகாரிகளை தெளிவுபடுத்தவுள்ளதாக அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

கப்பல் விபத்து மற்றும் கடலோர குழாய் அமைப்புகளில் காணப்படும் கோளாறுகள் ஆகியவற்றை முன்கூட்டியே தடுத்தல், கப்பல் விபத்துகள் ஏற்பட்டால் அதன் பாதிப்பை சரியாக மதிப்பிடுதல் மற்றும் அவ்வாறான பாதிப்புகளுக்கான இழப்பீடுகளை பெற்றுக்கொள்வதற்கான சரியான நடைமுறை ஆகிய செயன்முறைகள் தொடர்பில் இலங்கை அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளது.

இந்தத் தெளிவுபடுத்தலுக்காக இலங்கை துறைமுக அதிகார சபை, கரையோர பாதுகாப்பு திணைக்களம், இடர்முகாமைத்துவ நிலையம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.



# கடமையேற்பு

அபு அலா

கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளராக (நிர்வாகம்) எம்.எம் நஸீர் தனது கடமைகளை நேற்று (11) பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ. மன்சூர், விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜீ முத்துவண்டா, முதலமைச்சின் செயலாளர் என். மதிவண்ணன், ஆளணி மற்றும் பயிற்சி பிரதி பிரதம செயலாளர் (திருமதி) ஆர்.யூ ஜலீல், சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே முரளிதரன், கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ. ஜீ திஸாநாயக்கா உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# “கச்சதீவு எமது தீவு; அதனை வேறு யாரும் உரிமை கோர முடியாது”

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என்.வி சுப்பிரமணியம்

எஸ். நிதர்ஷன்

இந்தியாவுக்கு கச்சதீவு சொந்தமான தீவு அல்ல; அது எமக்குச் சொந்தமான தீவு. அதனை வேறு யாரும் உரிமை கோர முடியாது என வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் புதிய தலைவர் என்.வி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

யாழில் ஞாயிற்றுக்கிழமை (10) நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவித்ததாவது: இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறல், இழுவைமடித் தொழில், தடைசெய்யப்பட்ட தொழில் நடவடிக்கைகளால் வடபகுதி வளங்கள், சர்வதேச நாடுகளுக்கு பங்கிடப்படுவதால் இங்குள்ள மீனவர்கள் பல்வேறு பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆகையால், இந்தியாவின் அத்துமீறல்களையும் தடை செய்யப்பட்ட தொழில்களையும் நிறுத்த வேண்டும் என்பதுடன்




எமது வளங்களை எங்களுக்கு கிடைக்க கூடிய வகையில் பாதுகாக்க வேண்டுமென தொடர்ச்சியாக நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம்.

இந்த விடயங்களை உள்ளடக்கி 13 அம்சக் கோரிக்கைகள் அடங்கி மகஜரை மீன்பிடி அமைச்சுக்கு வழங்கியிருந்தோம். இதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் அறிவித்த போதும் இதுவரையில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இத்தகைய நிலைமைகளின் மத்தியில், தொடர்ந்தும் மீனவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றமையால் வடக்கு மாகாணம் முழுவதும் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்துவதற்கு தீர்மானித்திருக்கிறோம். கடற்றொழில் சமூகமென எங்களை ஒதுக்கி விடாமல், கடற்றொழில் அமைப்புகள் உட்பட அனைத்து தரப்பினரும் தங்களது முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டுமென கோருகிறோம். மேலும், கச்சதீவு குறித்து தற்போது பலராலும் பேசப்படுகிறது. இது காலத்துக்குக் காலம் செய்யப்படுகிற அரசியல் நாடகமாகவே பார்க்கிறோம். கச்சதீவு என்பது இந்தியாவுக்கு உரியதல்ல. இரு நாடுகளுக்கும் இடையில் இருந்ததால் ஏற்பட்ட இழுபறியால் அது இலங்கைக்கு சொந்தமாகியது. இவ்வாறிருக்கையில், இந்தியா ஒன்றும் எமக்கு கச்சதீவை தாரை வார்க்கவில்லை. அது எமது தீவு; அதனை வேறு யாரும் உரிமை கோர முடியாது என்றார்.



வரட்சியால் கிளிநொச்சியில்

# தெங்கு பயிர்ச் செய்கை பாதிப்பு

பா. ஜதுர்சனா

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் வரட்சி காரணமாக அக்கராயன், ஆனைவிழுந்தான், வன்னேரிக் குளம் போன்ற பகுதிகளில் தெங்குப் பயிர்ச் செய்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், குறித்த பிரதேசங்களில் நிலவி வரும் வரட்சியால் வாழை, பப்பாசி போன்ற பயிர்களும் அழிவடைந்து வருகின்றன.

அதாவது, அதிக வரட்சியின் காரணமாக தென்னை மரங்கள் கருகி, அழிவடைந்து வருவதுடன் இளநீர் குரும்பைகள் நீரின்றி கருகி விழுகின்ற நிலையும் காணப்படுகிறது. இதனை வாழ்வாதாரமாகக் கொண்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடரும் வரட்சி காரணமாக, முல்லைத்தீவு மாவட்டத்தின் அம்பலப்பெருமாள் குளம், ஆரோக்கியபுரம், அமைதிபுரம், கோட்டைகட்டி, துணுக்காய், ஆலங்குளம் போன்ற பகுதிகளில் குடிநீர் நெருக்கடி காணப்படுகின்றது.

அதேபோல், கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளிலும் வரட்சி காரணமாக அதிகளவான பாதிப்புகள் காணப்படுகின்றன. குறிப்பாக, அன்றாடத் தேவைக்கான குடிநீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

பூநகரி பகுதியில் உள்ள நீர்நிலைகள் வற்றிக் காணப்படுவதால் கால்நடைகளுக்கு குடிநீர் இல்லாத நிலை காணப்படுவதுடன் கால்நடைகள் குடிநீர் தேடி அலையும் நிலையும் காணப்படுகின்றது.

# ‘புளத் சிற்றி’ ரயிலுடன் மோதி யானை பலி

எம்.எஸ்.எம் நூர்தீன்

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு சென்ற ரயிலுடன் ஞாயிற்றுக்கிழமை (10) மாலை பூனானை அசைலபுரம் எனும் பகுதியில் வைத்து யானை மோதியதில் குறித்த யானை சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளது.

கொழும்பிலிருந்து பிற்பகல் மூன்று மணிக்கு ‘புளத் சிற்றி’ ரயில் புறப்பட்டு, இரவு 9.30 மணியளவில் புனானை, அசைலபுரம் பகுதியில் யானை கூட்டம் ஒன்று ரயில் பாதையின் ஊடாக கடந்து சென்ற நிலையில், கடைசியாக சென்ற யானையே ரயிலில் மோதுண்டுள்ளது. யானை அவ்விடத்திலேயே உயிரிழந்ததையடுத்து, பொலிஸார், வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் குறித்த இடத்துக்கு விரைந்து, உயிரிழந்த யானையை அகற்றிய பின்னர், குறித்த ரயில் அதிகாலை மூன்று மணிக்கு மட்டக்களப்பை சென்றடைந்தது.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி இரவு எட்டு மணிக்கு புறப்பட்ட ‘மீன கயா’ ரயில், அசைலபுரம் பகுதியில் இருந்து அதிகாலை வேளையே கொழும்புக்கு புறப்பட்டு சென்றது.

‘புளத் சிற்றி’ ரயிலில் வந்த பிரயாணிகள், பிரதான வீதிக்கு வந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற வாகனங்களில் ஏறிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

# “கல்வியியலாளர்களும் அரசியலுக்குள் பிரவேசிக்க வேண்டும்”

## கலாநிதி இல்ஹாம் மரைக்கார்

எம்.யூ.எம் சனூன்

கல்வியலாளர்களும் அரசியலுக்குள் பிரவேசித்தால் மாத்திரமே அரசியலில் மாற்றத்தை கொண்டு வர முடியும் என பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளரும் அமேசன் உயர்கல்வி நிறுவனத்தின் பணிப்பாளருமான கலாநிதி இல்ஹாம் மரைக்கார் தெரிவித்தார்.

புத்தளம் ஐ.சொப்ட் உயர் கல்வி நிறுவனத்தின் விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் புத்தளம் மரிக்கார் வீதியில் அமைந்துள்ள கந்தையா கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது, அங்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு, அவர் மேலும் உரையாற்றுகையில்



கூறியதாவது: இளைஞர்கள் உயர் கல்வி கற்பதானது, காலத்தின் தேவையாக மாறியுள்ளது. கல்வி எழுச்சி ஊடாகவே சிறந்த சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். கல்வியியலாளர்கள் தமது நடவடிக்கைகளை கல்வியின்பால் மாத்திரம் நிறுத்தி விடாமல் அரசியலுக்குள்ளும் பிரவேசித்தால் மாத்திரமே அரசியலில் சிறந்ததொரு மாற்றத்தை கொண்டு வர முடியும் என்றார்.

பணம் கொடுக்காது

# மதுபானம் வாங்கிய பொலிஸுக்கு பணி இடைநிறுத்தம்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் மதுபானசாலையில் மதுபானத்தை வாங்கிக் கொண்டு பணம் கொடுக்காது, ஓட்டோவில் தப்பி ஓடிய பொலிஸ் பரிசோதகர் சேவையில் இருந்து சனிக்கிழமை (09) இடை நிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டு. நகரிலுள்ள மதுபானசாலைகள் இரண்டில் சம்பவதினமான வெள்ளிக்கிழமை (08) பகல் ஓட்டோவில் சென்று, மதுபானசாலையில் அரைப் போத்தல் மதுபானத்தை வாங்கிவிட்டு, “பணம் ஓட்டோவில் இருக்கிறது; எடுத்துக்கொண்டு வந்து தருகிறேன்” எனத் தெரிவித்துவிட்டு, பணத்தை கொடுக்காது ஓட்டோவில் தப்பி ஓடிய சம்பவம், அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமெராவில் பதிவாகியிருந்தது.

இந்த நிலையில், வாகரை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் குறித்த பொலிஸ் பரிசோதகர், சம்பவதினம் பொலிஸ் நிலையத்தில் இருந்து மட்டக்களப்புக்குச் செல்வதாக கடமைகையேட்டில் பதிவிட்டுவிட்டு வெளியேறி, இந்த மோசடியில் ஈடுபட்ட பின்னர், பொலிஸ் நிலையத்துக்கு திரும்பாது அவர் தலைமறைவாகியுள்ளார்.

குறித்த பொலிஸ் பரிசோதகர் ஏற்கெனவே தங்கச்சங்கிலி அறுத்த குற்றச்சாட்டு உட்பட ஏழு குற்றச்சாட்டுகள் காரணமாக ஏழு தடவைகள் பணி இடை நிறுத்தப்பட்டு, மீண்டும் சேவையில் சேர்ந்து கடமையாற்றியவர் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

“முள்ளிவாக்கால் இனவழிப்பு தொடர்பாக

# சரத் பொன்சேகா மீதும் சர்வதேச விசாரணை வேண்டும்”

## கோ. கருணாகரன் எம்.பி



கனகராசா சரவணன்

ஈஸ்டர் குண்டு வெடிப்புக்கு சர்வதேச விசாரணை வேண்டும் எனத் தெரிவிக்கும் சரத் பொன்சேகா, 2009ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்படும் போது, அவர் இராணுத் தளபதியாக இருந்தார். எனவே, அவர்களுக்கு என்ன நடந்தது என அவர் பதில் கூறவேண்டும்; அல்லது அவர் மீதும் 2009 வரை வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற தமிழர் மீதான படுகொலைகளுக்கும் சர்வதேச விசாரணை வேண்டும் என கோ. கருணாகரன் எம்.பி கோரிக்கை விடுத்தார்.

மட்டக்களப்பு, வாவி கரையிலுள்ள பாராளுமன்ற உறுப்பினரது காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) இடம்பெற்ற ஊடக மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பாக ‘சனல் 4’ ஊடகம் ஆவணப்படம் வெளியிட்டுள்ளது. இது, இலங்கையில் உள்ள பலரது உண்மை முகங்களை மக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளது.

இந்தக் குண்டு வெடிப்புக்கு நியாயம் கோரி, இன்று சர்வதேச விசாரணை வேண்டும் என பேராயர் கார்டினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, சரத் பொன்சேகா, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பலர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்த நாட்டில், உள்நாட்டு விசாரணைக்கு எந்த விதமான நம்பிக்கையும் இல்லை என்பது இவர்களுக்கு தெரியும். ஏனென்றால், இந்தக் குண்டு வெடிப்பு தொடர்பாக விசாரணைக்கு பொறுப்பாக இருந்து, விசாரணை செய்து கொண்டிருந்தவர் 2019ஆம் ஆண்டு கோட்டாபய ஜனாதிபதியாக வந்ததும், நாட்டை விட்டு தப்பிச் சென்றுவிட்டார்.

அரசியல் ரீதியாக தங்களை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வெல்வதற்காகவுமே சர்வதேச விசாரணை என்று கேட்கிறார்கள் எனக் கருதவேண்டியுள்ளது. ஈஸ்டர் குண்டு வெடிப்பையும் மக்களது உயிர்களையும் வைத்து அரசியல் சித்து விளையாட்டு காட்டாமல், இந்த நாட்டில் 2009 வரை கொல்லப்பட்ட - காணாமல் ஆக்கப்பட்ட அத்தனை உயிர்களுக்கும் நியாயம் கிடைக்க வேண்டும்

அது மாத்திரமல்ல, கொக்குதொடுவாய் மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்படும் உடலங்கள் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்தவர்களது உடலங்களாக இருக்கக் கூடும். எனவே அனைத்து படுகொலைகளுக்கும் சர்வதேச விசாரணை வேண்டும்.

இந்தக் குண்டு வெடிப்புக்கு திட்டங்கள் சிறைச்சாலையில் தீட்டப்பட்டுள்ளன. எனவே குண்டுவெடிப்பு தொடர்பாக, சர்வதேச விசாரணை ஊடாக கண்டுபிடித்து, சூத்திரதாரிகளுக்கு தண்டனை வழங்குவது மாத்திரமல்ல, வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற அநியாயங்களுக்கும் கொலை, கடத்தல்களுக்கும் நியாயம் கிடைக்க ஆவண செய்ய வேண்டும் என்றார்.

**வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனத்தின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (2) ஆம் பிரிவின் கீழ் கீழ்வரும் கம்பனி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கம்பனியின் புதிய பெயர்:** சன்ட்ரஸ்ட் இன்ஷூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் பழைய பெயர்:** அம்ட்ரஸ்ட் இன்ஷூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

**பதிவு செய்யப்பட்ட இலக்கம்:** பி வீ 6125

**நடைமுறை திகதி:** 15 ஓகஸ்ட் 2023

**கம்பனி செயலாளர்கள்**
**ஏசிஎம்ஜ கொம்செக் (பீவீடி) எல்டிடி**

Latest news at your fingertips!




Log on to www.dailymirror.lk

# பணவீக்கத்தின் வீழ்ச்சி; போற்றப்பட வேண்டிய மத்திய வங்கியின் தலைமைத்துவம்

இரட்டை இலக்கங்களில் காணப்பட்ட நாட்டின் பணவீக்க வீதத்தை, ஒற்றை இலக்கத்துக்கு கொண்டு வருவதில் இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பாராட்டப்பட வேண்டியனவாக அமைந்துள்ளன.

சாதாரண பொது மக்களுக்கு பணவீக்கம் என்பதன் விளக்கத்தைப் பெறுவது கடினமான காரணமாக இருந்த போதிலும், அது உச்சக் கட்டம் தொட்டிருந்த வேளையில், நாட்டில் பெருமளவு நெருக்கடிகள் நிலவியிருந்தமையை உணர முடிந்தது. 2022ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில், நாட்டின் பணவீக்க வீதம் 69.8% ஆக பதிவாகியிருந்தது. 1950ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டதைத் தொடர்ந்து பதிவாகியிருந்த உயர்ந்த பணவீக்கமாக இது அமைந்திருந்தது. இதனால் நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரமும் மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது.

பணவீக்கம் காரணமாக வறுமையில் வசிப்போரும் சமூகத்தில் இலகுவில் பாதிப்புறக்கூடிய நிலையில் உள்ளவர்களும் அதிகமாக பாதிக்கப்படுவது வழமை. உச்சம் தொட்டிருந்த பணவீக்க உயர்வின் போது, இலங்கையின் வறுமை வீதம் 2021ஆம் ஆண்டில் காணப்பட்ட 13.1% என்பதிலிருந்து 2022ஆம் ஆண்டில் 25% ஆக உயர்ந்திருந்ததாக உலக வங்கியின் மத்திய ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அது போன்று, உணவு பாதுகாப்பு இன்மை, சுகாதாரம், கல்வி, உணவு உள்ளெடுப்புக்காக செலவிடும் தொகை பெருமளவு குறைந்திருந்தத்துள்ளதாகவும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியிருந்தது.


குறிப்பாக, பணம் அச்சிடலுக்கும் பணவீக்கத்துக்கும் நேரடித் தொடர்பு இல்லை என பொது மக்களை தவறாக வழிநடத்தும் வகையில், மத்திய வங்கியின் முன்பிருந்த இரண்டு ஆளுநர்களும் பொது வெளியில் கருத்துத் தெரிவித்திருந்த நிலையில், அரசியல் உயர் மட்டங்களால் மேற்கொள்ளப்பட்ட தவறான பொருளாதாரக் கொள்கைகள், கொவிட்-19 பெருந்தொற்றின் தாக்கம் காரணமாக உலக நாடுகள் ஸ்தம்பிதமடைந்தமை போன்ற காரணிகளால், இலங்கையும் கடும் பொருளாதார பின்னடைவுக்கு முகங்கொடுத்தது. குறிப்பாக, பொது மக்கள் தமக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களையும் சேவைகளையும் பெற்றுக் கொள்வதற்கு கூட, நீண்ட வரிசைகளில் நாள் கணக்கில் காத்திருந்து அல்லலுறும் நிலை ஏற்பட்டிருந்தது.

இவ்வாறான சவால்கள் நிறைந்த சூழலில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கடமையை பொறுப்பேற்ற தற்போதைய ஆளுநர் நந்தலால் வீரசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழான செயலணியால் மேற்கொள்ளப்பட்ட சில சாமர்த்தியமான தீர்மானங்கள், செயற்பாடுகள் என்பவற்றால் அதிகரித்துச் சென்ற பணவீக்க வீதத்தை கட்டுப்படுத்த முடிந்தது.

நாட்டில் பொறுப்புக்கூற வேண்டிய பதவி நிலைகளுக்கு பொருத்தமான தகைமை கொண்டவர்களை தெரிவு செய்யாமையின் பாதிப்புகளை, நாடும் மக்களும் உணர்ந்துள்ளனர். வரலாற்றில் இதற்கு பெருமளவு சான்றுகள் உள்ளன.

தாம் பதவியிலிருந்து ஓய்வு பெற்று அவுஸ்திரேலியாவில் மகிழ்ச்சிகரமான, நிம்மதியான வாழ்க்கையை முறையை முன்னெடுத்து வசித்து வந்த நிலையில், நாட்டுக்காக மத்திய வங்கியின் ஆளுநர் பதவிப் பொறுப்பை ஏற்குமாறு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று, மீண்டும் இலங்கைக்கு வந்து சேவையாற்றுகின்றமையானது, நாளாந்தம் வெளிநாடுகளுக்கு படையெடுத்துச் செல்லும் இலங்கையின் ஏனைய துறைகளின் அதிகாரிகளுக்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்துள்ளது.




‘சனல் 4’ காணொளி:

# சர்ச்சையும் சந்தேகங்களும்

மொஹமட் பாதுஷா

இலங்கையில் வாழ்கின்ற எந்தவோர் இனக்குழுமத்துக்கும் மற்றைய சகோதர இனத்தின் மீதோ, சமூகத்தின் மீதோ எந்தவிதக் காழ்ப்புணர்ச்சியும் இல்லை. சாதாரண மக்கள், இந்த நாட்டில் ஒற்றுமையுடன் நிம்மதியாக வாழ்ந்து விட்டுப் போவதற்கே விரும்புகின்றனர்.

ஆனால், மக்களைப் பிரித்து ஆள்வதற்கான தேவையும் ஆள்வதற்காகவே பிரிக்கின்ற தேவையும் அரசியல் தரப்புகளுக்கு இருக்கின்றன. மக்களிடையே முரண்பாடுகளை தூண்டிவிட்டு, அதைச் சாதகமாக்கி தமது நலன்களை உறுதிசெய்து கொள்வதில், சில உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகள் குறியாய் இருக்கின்றன.

மறுபுறத்தில், அற்பத்தனமான காரணங்களுக்காக அல்லது முட்டாள்தனமான சித்தாந்தங்களை தூக்கிப் பிடித்துக் கொண்டு, மிலேச்சத்தனமான காரியங்களைச் செய்து விட்டு, ஒடிஒளிந்து கொள்கின்ற பயங்கரவாத, அடிப்படைவாத, இனவாத, அரசியல் குழுக்களும் தோற்றம் பெற்றிருக்கின்றன.

இந்தப் பின்னணியில், இலங்கையில் மட்டுமன்றி உலகெங்கும் நடந்த, நடக்கின்ற, சிறிய - பெரிய முக்கிய சம்பவங்களுக்குப் பின்னால், வெளியில் தெரியாத ஒரு மறைமுக காரணம், மறைகரம் இருக்கின்றது. ஆனால், இவற்றைப் புரிந்து கொள்வதற்கு நீண்டகாலம் எடுக்கின்றது.

அந்த வகையில், 2019 உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலும் அவ்வகை சார்ந்ததே! இதற்குப் பின்னால், வேறு ஒரு நிகழ்ச்சி நிரல், சூழ்ச்சி இருக்க வேண்டும் என்று முஸ்லிம் சமூகம் அன்றே சொன்னது.

முஸ்லிம்கள் மட்டுமன்றி தமிழ், சிங்கள சமூகத்தில் இருக்கின்ற நடுநிலை அவதானிகளும் இதையே கூறினர். அதுமட்டுமன்றி, பேராயர் கார்டினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கூட, “இதற்குப் பின்னால் ஒரு சதித்திட்டம் இருக்கின்றது. அதைக் கண்டறிய வேண்டும்” என்று அப்போதே சொன்னார்.

இந்தப் பயங்கரவாத தாக்குதலில் 269 பேர் கொல்லப்பட்டனர்; பலர் ஊனமுற்றனர். இவர்களில் வெளிநாட்டவர்கள், குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியவர்கள் என்போரும் அடங்குகின்றனர். அதுமட்டுமன்றி, தாக்குதல் இலக்காக தமிழர்கள் அதிகம் கூடும் கத்தோலிக்க தேவாலயங்களும் வெளிநாட்டவர்கள் வரும் இடமான ஐந்து நட்சத்திர ஹோட்டல்களும் இருந்தன.

எனவேதான், முஸ்லிம் சமூகம் “இதனை நாங்கள் செய்யவில்லை” என்று மன்றாட்டமாகக் கூறியது. ஆனால், அரசாங்கமோ வெளிநாடுகளோ பொறுப்புவாய்ந்த அதிகாரிகளோ அதனைக் கண்டு கொள்ளவில்லை. சஹ்ரான் என்ற பயங்கரவாத கும்பலை காரணமாகக் காட்டி, முழுப் பழியும் முஸ்லிம் சமூகத்தின் மீது போடப்பட்டது. அதுதான் அவர்களது திட்டமாகவும் தேவையாகவும் இருந்திருக்க வேண்டும் என்று இப்போது தோன்றுகின்றது.

ஏனெனில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகள் யார் என்பது சாதாரண மக்களுக்குத்தான் தெரியாதே தவிர, ஆட்சியாளர்களும் பல அரசியல்வாதிகளும் பாதுகாப்பு அதிகாரிகளும் தாக்குதல்கள் குறித்து முன்கூட்டியே அறிந்திருந்தார்கள். எனவே, அவர்கள் தங்களைத் தாங்களே குற்றவாளிகள் என கண்டுபிடிக்க முன்வரவே மாட்டார்கள்.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை; முறையான விசாரணைகள் நடத்தப்படவில்லை. விசாரணைக் குழுக்களோடும் அறிக்கைகளோடும் கிட்டத்தட்ட கோப்புகள் எல்லாம் மூடப்பட்டிருந்த நிலையில், நான்கு வருடங்கள் கழித்து, ‘சனல் 4’ தொலைக்காட்சி ஒரு குண்டை தூக்கிப் போட்டுள்ளது.

ஏற்கெனவே, 2011 இல் ‘இலங்கையின் கொலைக்களம்’ என்ற தலைப்பில் காணொளியை பிரித்தானியாவின் ‘சனல் 4’ ஒளிபரப்பியிருந்தது. இது யுத்தக் குற்றங்கள் பற்றிய பெரும் சர்ச்சைகளையும் வாதப் பிரதிவாதங்களையும் தோற்றுவித்தது. இன்றும் இலங்கை அரசாங்கம் இந்தச் சிக்கலில் இருந்து விடுபடவில்லை என்று கூறலாம்.

இதே தொலைக்காட்சி, இப்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணி குறித்த ஆவணப் படம் ஒன்றை வெளியிட்டுள்ளது. 2019 இல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஏற்படுத்திய அதிர்வுகளுக்கு சற்றும் குறைவில்லாத அதிர்வலைகளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணி குறித்த ஆவணப் படமும் இலங்கையிலும் சர்வதேச அரங்கிலும் ஏற்படுத்தியுள்ளது.

‘பிள்ளையான்’ எனப்படும் இராஜாங்க அமைச்சராக பதவி வகிக்கின்ற சிவனேசதுரை சந்திரகாந்தனின் ஊடகத் தொடர்பாளராகவும் அவரது வலது கரமாகவும் செயற்பட்ட ‘ஆசாத் மௌலானா’ எனும் மொஹமட் மிஹ்லார் மொஹமட் அன்ஸிர் என்பவரே, இந்தக் காணொளியில் பிரதான சாட்சியாளராக தோன்றுகின்றார்.

இதுதவிர, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான பொலிஸ் பிரிவின் உயரதிகாரி மற்றும் இன்னுமொரு மேலதிகாரி உள்ளிட்டோர் ஏனைய பிரத்தியேக வாக்குமூலங்களை ‘சனல் 4’ இற்கு வழங்கியுள்ளனர். இத்தாக்குதலுக்குப் பின்னால், ஓர் அரசியல் நிகழ்ச்சி நிரல் இருக்கின்றது என்று 2019 இலேயே எழுந்த ஊகங்கள், இப்போது மீண்டும் கிளறிவிடப்பட்டுள்ளன.

சுருங்கக் கூறின், ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி, அதிகாரத்துக்கு வருவதற்காக ராஜபக்ஷர்கள் இதைச் செய்வித்ததாகவும், சிறையில் இருந்த பிள்ளையான் இதை ஏற்பாடு செய்ததாகவும் ராஜபக்ஷர்களுக்கு நெருக்கமான புலனாய்வு பிரிவு உயரதிகாரி சுரேஷ் சாலே மற்றும் சஹ்ரான் கும்பலுக்கு இடையிலான சந்திப்பை தான் முன்னின்று ஒழுங்குசெய்ததாக அசாத் மௌலானா இதில் கூறியிருக்கின்றார்.

இதுதவிர ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை யாரால் மேற்கொள்ளப்பட்டது என்பது குறித்தும் அவர் ‘சனல் 4’ காணொளியில் விவரிக்கின்றார். இதேவேளை, இலங்கையில் இடம்பெற்ற பல கொலை, கடத்தல் சம்பவங்களுடன் பிள்ளையானுக்கும் தனக்கும் ராஜபக்ஷ தரப்புக்கும் இருந்த தொடர்புகள் பற்றி, அசாத் மௌலானா தகவல் வெளியிடும் இன்னுமொரு ஒலிப்பதிவும் வெளியாகி இருக்கின்றது.

‘சனல் 4’ காணொளியில் குறிப்பிடப்படும் குற்றச்சாட்டுகளை சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் மறுத்துள்ளனர். “வழக்கமாக புகலிடக் கோரிக்கையாளர்கள் கூறுகின்ற சோடிக்கப்பட்ட கதைகளைப் போல, அசாத்தும் சுவிட்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோருவதற்காக இதனை கூறுகின்றார். இது விசாரிக்கப்பட வேண்டும்” என்று இராஜாங்க அமைச்சர் எஸ். சந்திரகாந்தன் கூறியுள்ளார்.

அசாத் மௌலானாவின் இத்தகைய வாக்குமூலங்களை, சுரேஷ் சாலே, மறுத்துள்ளார். “அந்தக் காலப்பகுதியில் நான் இலங்கையில் இருக்கவில்லை” என்று அவர் விளக்கம் கூறியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, “இது பொய்கள் திணிக்கப்பட்ட ஒரு காணொளி” என விவரித்துள்ளார். “வழக்கமாக ‘சனல் 4’ செய்யும் வேலையின் தொடர்ச்சிதான் இது” என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சும் இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்து உத்தியோகபூர்வமாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், விசாரணை நடத்த தெரிவுக்குழு அமைப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆனால், இக்காணொளி பற்றிய வாதப் பிரதிவாதங்கள் மிகக் கிட்டிய காலத்தில் அடங்கிப் போவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றே கூறலாம்.

இக்குற்றச்சாட்டுகளை மறுப்பவர்கள் சொல்வது போல, அசாத் மௌலானா தனது புகலிடக் கோரிக்கைக்காக அல்லது வேறு வெகுமதிகளுக்காக இதனை கூறலாம். அல்லது இன்னுமொரு தேர்தலை முன்னிட்ட ஒரு நாடகமாக இது இருக்கலாம். இதற்குப் பின்னால் நீதி நிலைநாட்டுதல் என்ற நோக்கத்தை தவிர வேறு உள்நோக்கங்களும் இருக்கலாம்.

இதில், முழுமையான உண்மையோ அரைவாசி உண்மையோ இருக்கலாம். ஆனால், முற்றுமுழுதாக எல்லாம் சோடிக்கப்பட்டது என்று கூறி விட முடியாது. ஒரு சதவீத உண்மை இருந்தாலும் அது வெளிக்கொணரப்பட வேண்டும். ஏனெனில், இப்படியான பின்னணி ஒன்று இருக்கின்றது என்ற விடயம், 2019ஆம் ஆண்டிலேயே பேசப்பட்டது என்பதை மறந்து விடக்கூடாது.

‘சனல் 4’ இல் வாக்குமூலம் அளித்துள்ள அசாத் மௌலானா, சமூக சிந்தனையாளரும் இல்லை; சுத்தவாளியும் இல்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணி குறித்த விவரங்களை எல்லாம் அவர் அறிந்திருந்தும், இப்போது தனக்கு ஒரு தேவை என வருகின்ற போதுதான் இவற்றை வெளிப்படுத்துகின்றார். எனவே, அவர் உட்பட சம்பந்தப்பட்டதாக சொல்லப்படும் அனைத்து நபர்களும் விசாரிக்கப்படுதல் வேண்டும்.

‘சனல் 4’ என்பது எப்படியான ஓர் ஊடக நிறுவனமாக இருந்தாலும், காணொளியின் உண்மைத் தன்மை எதுவாக இருந்தாலும், அதை எடுத்த எடுப்பில் மறுதலித்து விட முடியாது. ஏனெனில், 2019இல் நடந்த மிலேச்சத்தனமான தாக்குதல், ஒரு சர்வசாதாரணமான விடயமல்ல.

எனவே, இதில் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்த உண்மைத் தன்மையை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அசாத் மௌலானா இப்போது கூறும் விடயங்களை, ஒரு துரும்பாக வைத்து விசாரித்தால், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு மட்டுமன்றி, பல கொலைகளின் சூத்திரதாரிகள் வெளிச்சத்துக்கு வருவார்கள்.

அதனூடாக, இந்தப் படுபாதக செயலுடன் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும், அவர்கள் உள்நாட்டில் இருந்தாலும் வெளிநாட்டில் இருந்தாலும் அதிகாரத்தில் இருந்தாலும் அடங்கிப்போய் இருந்தாலும், குற்றவாளிகள் ஈவிரக்கம் இன்றி தண்டிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியம்.

அதைவிடுத்து, “இது பொய்யும் புரட்டும் சேர்த்து சொல்லப்படும் கட்டுக்கதை” என்று மேலோட்டமாக கூறிவிட்டு, கடந்து செல்ல முனைவது, சந்தேகங்களை இன்னும் வலுப்படுத்தவே உதவும்.



## வாழ்வியல் தரிசனம்

சிலவிடயங்களைக் கண்டபடி ஆராயாமல், சும்மா இருப்பதுவே நல்லது. நெஞ்சத்தைக் கசக்குவது புத்திசாலித்தனமானது அல்ல!

சில சமயங்களில் பெரிய பிரச்சினைகள் கூடத் தானாகவே கரைந்துவிடுகின்றன. சிலர் அற்பவிடயங்களை ஊதிப்பெருப்பித்து விடுவதுண்டு. முடிவைக் கண்டுபிடிக்க அவசரம் காட்டாமல், அமைதிக்கு இடம்கொடுங்கள். இதயத்தை மௌனமாக வைத்திருந்து, அதன் பின்னர் மூளையைப் பிரயோகியுங்கள். நல்ல முடிவுகள் தானாகவே உருவாகிவிடும். அவசரம், மூளைக்கு இடமளிக்காது என்பதை உணர்க! அநேகமானவர்கள் அற்ப விடயங்களுக்குப் பெரிதாகக் கற்பனை செய்வார்கள். வேலைகளை அதிகமாகச் செய்து, சிலசமயம் களைப்பின் இயலாமையால் கோபம் வந்துவிடுகின்றது. படிப்படியாகச் செய்யும் கருமங்கள், தோல்வியடைவதில்லை. தேகம் இரும்பால் ஆனதில்லை.

எல்லாமே பெரிய கஷ்டமானது; எதையும் செய்யமுடியாது என எண்ணினால் உலகம் எப்படி இயங்கும். எல்லோரும் இணைந்து செயலாற்றும்போதுதான், உலகத்தை இயங்க வைக்கமுடியும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கிண்ணியாவில் குடிநீருக்கு தட்டுப்பாடு

திருகோணமலை, கிண்ணியா பகுதியில் கடந்த ஆறு தினங்களுக்கு மேலாக, குடிநீர் இன்றி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை ஊடான நீர் வெட்டு மூன்று நாள்கள் அமலில் இருந்த நிலையில், குடி நீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனை நிவர்த்திக்கும் வகையில், பொது மக்களின் முறைப்பாட்டுக்கமைய, சனிக்கிழமை (09) கிண்ணியா நகர சபை ஊடாக, சபையின் செயலாளர் எம்.கே அனீஸின் நடவடிக்கையால் பெரியாற்று முனை, பெரிய கிண்ணியா உட்பட பல பகுதி மக்களுக்கு, 6,000 லீட்டர் கொள்ளளவு கொண்ட பவுசர் மூலமாக குடி நீர் விநியோகிக்கப்பட்டது.

தம்பலகாமம் பகுதியில் திருத்த வேலை காரணமாக, நீர் துண்டிக்கப்பட்டதால், உரிய நேரத்துக்கு நீர் வழங்க முடியாமல் போனதால் குடி நீருக்கான தட்டுப்பாடு நிலவியதுடன், இதனால் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர் உட்பட பலரும் நேர காலத்துக்கு தமது கடமைகளுக்குச் செல்ல முடியாது தவிக்கின்றனர்.

கிண்ணியாவில் தொடர்ந்தும் இந்த நிலை அடிக்கடி ஏற்படுவதுடன், சீரான குடி நீர் விநியோக முறை இன்மையாலும் மக்கள் அவதியுற்று வருகின்றார்கள். நீர் கட்டணத்தை மாத்திரம் அதிகரித்து விட்டு, நீர் விநியோகத்தை மந்த நிலைக்கு கொண்டு சென்றுள்ளனர் என்று பாதிக்கப்படும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

குறிப்பாக, அடிக்கடி திருத்த வேலை, நீர் வெட்டு என மக்கள் தொடர்ந்தும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவது நீண்ட காலமாகத் தொடர்கின்றது. எனவே, குடி நீர் சீராக விநியோகிக்கப்படுவதையும் முன் அறிவித்தல் இன்றி நீர் வெட்டு இடம்பெறாமல் இருப்பதையும் உறுதிப்படுத்தி, சீரான குடி நீரை தினமும் விநியோகிக்குமாறு உரிய அதிகாரிகளிடத்தில் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஹஸ்பர்

# ‘தலைவர் 171’



‘சூப்பர் ஸ்டார்’ ரஜினிகாந்த் நடிப்பில், லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில், ‘தலைவர் 171’ படத்தின் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ரஜினிகாந்தின் சூப்பர் ஹிட் திரைப்படம் ஆன ’ஜெயிலர்’ திரைப்படத்தை தயாரித்த சன் பிக்சர்ஸ் நிறுவனம் தான் இந்தப் படத்தை தயாரிக்க உள்ளது.

மேலும் இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்க இருப்பதாகவும் அன்பறிவ் ‘ஸ்டண்ட்’ இயக்குநர்களாக பணிபுரிய இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

‘தலைவர் 170’ படத்தின் படப்பிடிப்பு முடிந்த பின்னர், இந்தப் படத்தின் படப்பிடிப்பு தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ‘நான் ரெடி’

தமிழ் திரையுலகின் முன்னணி இயக்குநர்களில் ஒருவரான செல்வராகவன் இயக்கத்தில் 2007ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் ‘ஆடவாரி மாட்டலக்கு அர்த்தாலு வேருலே’ என்ற தெலுங்கு படம் ஆகும்.

வெங்கடேஷ், த்ரிஷா நடிப்பில் உருவான இந்தப் படம்தான் தமிழில் தனுஷ், நயன்தாரா நடிப்பில், மித்ரன் ஜவஹர் இயக்கத்தில் ’யாரடி நீ மோகினி’ என்ற படமாக உருவானது.

யுவன் சங்கர் ராஜா இசையில் உருவான இந்தப் படம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றதுடன், 15 ஆண்டுகளுக்கு முன்பே 30 கோடி ரூபாய் வசூல் செய்தது.

இந்த நிலையில், இந்தப் படத்தை அண்மையில் தான் பார்த்ததாகவும் வெங்கடேஷ், த்ரிஷாவுடன் பணிபுரிந்த இனிமையான ஞாபகம் வந்ததாகவும் இந்தப் படத்தின் இரண்டாம் பாகத்தை இயக்க விரும்புவதாகவும் செல்வராகவன் தெரிவித்துள்ளார்.

செல்வராகவனின் இந்த ‘ருவிட்’டுக்கு பதில் அளித்த த்ரிஷா ’நான் ரெடி’ என்று குறிப்பிட்டுள்ளார். இந்தப் படத்தின் இரண்டாம் பாகம் வருமா? வெங்கடேஷ் மற்றும் த்ரிஷா மீண்டும் நடிப்பார்களா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.





# அட்லியின் அடுத்த ‘ஹீரோ’ இவரா?

அட்லி இயக்கத்தில், ஷாருக்கான், நயன்தாரா நடிப்பில், உருவான ’ஜவான்’ திரைப்படம் வெளியாகி மிகப்பெரிய வரவேற்பை பெற்றுள்ள நிலையில் அவருடைய அடுத்த படத்தின் ஹீரோ குறித்த தகவல் தற்போது கசிந்து உள்ளது.

‘ராஜா ராணி’, ’தெறி’, ’மெர்சல்’, ’பிகில்’, ’ஜவான்’ என ஐந்து வெற்றி படங்களை இயக்கியவர் இயக்குநர் அட்லி. இதுவரை தோல்வியே காணாத அவர், கொமர்சியலாக வெற்றி பெற்றுள்ளார்.

’ஜவான்’திரைப்படத்தை முடித்துவிட்டு மனைவி மற்றும் குழந்தையுடன் மூன்று மாதம் முழுமையாக ஓய்வு எடுக்கப் போவதாக அட்லி கூறியுள்ளார்.

இந்த நிலையில், விஜய்யின் அடுத்த படத்தை இயக்குவார் என்று கூறப்பட்ட நிலையில், தற்போது அட்லி அடுத்ததாக ‘அல்லு அர்ஜுன்’ திரைப்படத்தை இயக்க இருப்பதாக கூறப்படுகிறது.

ஏற்கெனவே முதல் கட்ட பேச்சுவார்த்தை முடிந்து விட்டதாகவும், அட்லி ஓய்வுக்கு பின்னர் சென்னை திரும்பியவுடன் இந்தப் படத்தின் அடுத்த கட்ட பேச்சுவார்த்தை நடைபெறும் என்றும் கூறப்படுகிறது.



# ‘மிஸ் மேகி’

தமிழ் திரை உலகின் முன்னணி நகைச்சுவை நடிகர்களில் ஒருவரான யோகி பாபு, ‘ ஹீரோ’வாக நடித்து வரும் படங்களும் நல்ல வெற்றியைப் பெற்று வருகின்றன.

இந்த நிலையில், யோகி பாபு முக்கிய வேடத்தில் நடித்து வந்த ’மிஸ் மேகி’ படத்தின் படப்பிடிப்பு கடந்த சில மாதங்களாக நடைபெற்று வந்த நிலையில், தற்போது படப்பிடிப்பு முடிவடைந்துள்ளதாக படக்குழுவினர் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.

மேலும் படப்பிடிப்பின் கடைசி நாளில், படக்குழுவினர் அனைவரும் பிரியாணி தயார் செய்து சாப்பிடும் வீடியோவை வெளியிட்டுள்ள நிலையில், அந்த வீடியோ தற்போது வைரல் ஆகி வருகிறது.

இந்தப் படத்தில் யோகி பாபு, ஆங்கிலோ இந்திய பெண்ணாக நடித்துள்ளார். மாதம்பட்டி ரங்கராஜ், ஆத்மிகா நடிப்பில் உருவாகிய இந்தப் படத்தை லதா மணியரசு இயக்கியுள்ளார்.

கார்த்திக் இசையில், கௌதம் ராஜேந்திரன்





ஒளிப்பதிவில், சதீஷ் சூர்யா படத்தொகுப்பில் உருவாகியுள்ள இந்தப் படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்ததை அடுத்து, இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தப் படம் வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.

# சூரி ‘ஹீரோ’வாக நடிக்கும் ‘கருடன்’

தமிழ்த் திரையுலகின் முன்னணி நகைச்சுவை நடிகர்களில் ஒருவரான சூரி அண்மையில் வெளியான வெற்றிமாறனின் ‘விடுதலை’ என்ற திரைப்படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடித்திருந்தார்.

அதன் பிறகு, தற்போது சிவகார்த்திகேயன் தயாரிப்பில் உருவாகி வரும் ’கொட்டுக்காளி’என்ற திரைப்படத்தில் நாயகனாக நடித்து வருகிறார்.

இந்த நிலையில், சூரி நாயகனாக நடிக்கும் இன்னொரு திரைப்படத்தின் படப்பிடிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்துக்கு ‘கருடன்’ என்று பெயர் வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.



வெற்றிமாறன் கதையில் உருவாகும் இந்தப் படத்தை, துரை செந்தில்குமார் இயக்க உள்ளார். இவர் ஏற்கெனவே ‘எதிர்நீச்சல்’, ‘காக்கிச்சட்டை’, ‘கொடி’ உள்ளிட்ட படங்களை இயக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மகாகவி பாரதியார் நினைவு தினம்







சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் மற்றும் சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயம் இணைந்து நடத்திய மகாகவி பாரதியார் நினைவு தினமும் பரிசளிப்பு நிகழ்வும் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி யூ.கே.எம் றிம்சானின் நெறிப்படுத்தலில் எம்.எஸ் காரியப்பர் வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம் ஆரி∴ப் தலைமையில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் நேற்று (11) நடைபெற்றது. நிகழ்வில் கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி முன்னாள் அதிபரும், சட்டத்தரணியுமான எம்.சி ஆதம்பாவா பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மகாகவி பாரதியார் நினைவு தின பிரதான உரையை சிரேஷ்ட இலக்கியவாதியும் ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரியுமான ஏ. பீர் முஹம்மட் நிகழ்த்தினார்.

–நூருல் ஹுதா உமர்

## அமுத விழா சிறப்பு மலர்

பிரபல சமூக சேவையாளரான ‘லங்கா புத்ர’, ‘தேசமான்ய’, ‘தேசபந்து’ வேலுப்பிள்ளை சிதம்பரநாதனின் 80 வருட கால வாழ்க்கைப் பின்னணி மற்றும் அவரது சமூக சேவைகள் பற்றி எழுதப்பட்ட ‘அமுதவிழா சிறப்பு மலர்’ வெளியீட்டு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (10) கண்டி, விவேகாணந்தா கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. சினிமா, தொலைக்காட்சி நகைச்சுவை நடிகர் வில்சன் குணரத்ன, பேராதனை பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் துரை மனோகரன், ‘சேவா ஜோதி’ எஸ். முத்தையா, ‘தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தெ. செந்தில் வேலவர், அருட்தந்தை சந்துரூ பெர்னாண்டோ, நாவலப்பிட்டி கதிர்வேலாயுத சுவாமிகள் கோவில் அறங்காவலர் முத்தையாப்பிள்ளை ஸ்ரீ காந்தன், மாத்தளை இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பேரவையின் செயலாளர் எம்.எம் பீர்முஹம்மத், தேசமான்ய பி. பழனியப்பன், முருகாமலை முருகன் கோவில் பொறுப்பாளர் பெ. செல்லையா உட்பட அதிதிகளாகப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

– மொஹொமட் ஆஸிக்








## யாழ். இந்து மகளிர் கல்லூரியின் நிறுவுனர் தினம்

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் 80 ஆவது ஆண்டு நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் ஞாயிற்றுக்கிழமை (11) சிறப்பாக கல்லூரியில் நடைபெற்றது. கல்லூரியின் அதிபர் சுமதி கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது, கல்லூரி முன்றலில் நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதி சிலையும் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்த வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், சரஸ்வதி சிலையை திரைநீக்கம் செய்து வைத்தார்.

–எஸ். நிதர்ஷன்








## ‘மனோகரி’ சான்றிதழ்

கிழக்கு மாகாணத்தில் ‘மனோகரி’ பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு, மனோதத்துவ நிபுணர் கலாநிதி கணேசன் தலைமையில் கிரீன் கார்டன் ஹோட்டலில் நடைபெற்றது. மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் (CHRD) ஏற்பாட்டில் கிழக்கு மாகாண அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன ஊழியர்களுக்கு நடத்தப்பட்ட சமூக நலன் மற்றும் நல்வாழ்வு தொடர்பான பயிற்சி நெறியான ‘மனோகரி’ அலகைப் பூர்த்தி செய்தவர்கள் இதன்போது சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர். ஆறு நாள்களைக் கொண்ட இக்கற்கை நெறியை கலாநிதி கணேசன், சண்முகதாசன் ரவிந்திரன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு பயிற்சி வழங்கியிருந்தனர். இந்நிகழ்வில் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலைய நிறைவேற்று அதிகாரி மில்ஸ், தலைமைக் காரியாலய திட்ட முகாமையாளர் புஷ்பராணி பிகுறாடோ, மாவட்ட இணைப்பாளர் பரசுராமன் என பலர் கலந்து கொண்டனர்.

– ஏ.எச்.ஏ ஹுஸைன்



## சுதேச மருத்துவ மாநாடும் கண்காட்சியும்

சுதேச மருத்துவம் தொடர்பான சர்வதேச மாநாடும் கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சியும் வெள்ளிக்கிழமை (08) முதல் தொடர்ந்து மூன்று நாள்கள் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகோடி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வின் பிரதம அதிதியாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன கலந்துகொண்டு கண்காட்சி கூடத்தை திறந்துவைத்தார். இந்தக் கண்காட்சியில் ஒன்பது மாகாண சுதேச மருத்துவத் திணைக்களங்களின் காட்சிக் கூடங்களும், 35 ஆயுர்வேத, சித்த, யூனானி, காட்சிக் கூடங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

– அபு அலா







## தொழில் முனைவோருக்கான கருத்தரங்கு

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் ‘நாளைய தொடுவானத்துக்கு வழி செலுத்துதல்’ எனும் தலைப்பில் இலவச கருத்தரங்கு நேற்று முன்தினம் (10) காரைதீவு கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. கல்முனை நகர லயன்ஸ் கழக தலைவர் லயன் எந்திரி எம். சுதர்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் லயன் கலாநிதி எம். கோபாலரெத்தினம் கலந்து சிறப்பித்தார். தொழில் முனைவோர் மற்றும் உயர்கல்விக்காக காத்திருப்போர் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள் .

– வி.ரி சகாதேவராஜா




## ஏகதள கோபுர கும்பாபிஷேகம்

எட்டியாந்தோட்டை ஸ்ரீ கதிர்வேலாயுத கோவில் ஏகதள கோபுர கும்பாபிஷேக பெருவிழா, ஞாயிற்றுக்கிழமை (10) சிறப்பாக நடைபெற்றது.

– கமல் தாஸ்







# அதிக சக்திவாய்ந்த இராணுவ படை கொண்ட நாடு




உலக நாடுகளில் பெரும்பாலானவை இராணுவப் படையைக் கொண்டுள்ளன. எல்லைப் பாதுகாப்பு, போர், அவசர மற்றும் பேரிடர் காலங்களில் உதவி என்று வலிமையான இராணுவ படையை உருவாக்குவதற்கு ஒவ்வொரு நாட்டுக்கும் பிரத்யேகமான தகுதி, கடுமையான பயிற்சி என்று பல நடைமுறைகள் உள்ளன.

குளோபல் ஃபயர்பவர் இந்த ஆண்டுக்கான வலிமையான இராணுவப் படையை கொண்ட நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது. 145 நாடுகளில் உள்ள இராணுவப் படைகளின் பலம், பலவீனங்களை ஆய்வு செய்து, மேலும் 60 காரணிகளில் தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்டுள்ளது.

வலிமையான இராணுவம் கொண்ட நாடுகளில் முதலிடத்தில் அமெரிக்காவும் இரண்டாவது இடத்தில் ரஷ்யாவும், மூன்றாவது இடத்தில் சீனாவும் உள்ளன. ஒவ்வோர் ஆண்டும் GFP வெளியிடும் இந்தப் பட்டியல், ஒவ்வொரு நாட்டின் பாதுகாப்புக்கு துணைபுரியும் இராணுவத்தின் பலம் எவ்வளவு என்பதை வெளிக்காட்டுகிறது.

## சீனா

## மாணவர்கள் பாடசாலையில் உறங்க கட்டணம்



சீனாவில் உள்ள தனியார் ஆரம்பப் பாடசாலை ஒன்றில், மதிய உணவு இடைவேளையின் போது தலையணை அல்லது பாய் விரித்துத் தூங்கும் மாணவர்களுக்கு கட்டணம் விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்திருக்கும் WeChat தகவல் தொடர்பு குரூப்பில் இந்தக் கட்டண வசூல் முடிவு தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

பாடசாலை நிர்வாகம் வெளியிட்ட அறிவிப்பில், 'மேசையின் மீது படுத்து உறங்கும் மாணவர்களிடம் 200 யுவான் (ரூ. 8,885.34) கட்டணமாக வசூல் செய்யப்படும். பாய் விரித்து உறங்கும் மாணவர்கள் 360 யுவான் (ரூ. 15,993.61) கட்டணம் செலுத்த வேண்டி இருக்கும். பாடசாலை வளாகத்தில் உள்ள ஓய்வறைகளில் மெத்தையில் உறங்க விரும்பும் மாணவர்களுக்கு அதிகபட்சமாக 680 யுவான் (ரூ. 30,210.15) கட்டணம் விதிக்கப்படும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து பாடசாலை ஆசிரியர் ஒருவர் கூறுகையில், "விதிமுறைகளின் அடிப்படையில் தான் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற கட்டணம் வசூல் செய்வதற்கு தனியார் பாடசாலைகளுக்கு அதிகாரம் உள்ளது" என்று கூறினார். மாணவர்கள் தூங்கும் போது அவர்களை பத்திரமாக பார்த்துக் கொள்ள ஆசிரியர்களை தனியாக நியமிக்க வேண்டி இருக்கிறது என்பதால் இந்தக் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது என்று பாடசாலை நிர்வாகம் தரப்பில் கூறப்பட்டது.

## சூடான்

## டிரோன் தாக்குதலில் 40 பேர் பலி



ஆபிரிக்க நாடான சூடானில் இராணுவ ஆட்சி உள்ளது. அதனை எதிர்த்து துணை இராணுவத்தினர் போராடி வருகிறார்கள். இதனால் இருதரப்புக்கும் இடையே மோதல் நிலவி வருகிறது. இந்த உள்நாட்டு கலவரத்தில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். மேலும் பல்லாயிரக்கணக்கில் படுகாயம் அடைந்து வருகிறார்கள்.

இந்நிலையில், சூடான் தலைநகர் கார்டோமில் இராணுவத்தினர் டிரோன்களை வீசி திடீர் தாக்குதல் நடத்தினர். இது திசைமாறி அருகே உள்ள சந்தை வளாகத்தில் விழுந்தது. இந்தத் தாக்குதலில் பொதுமக்கள் 40 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும் 70க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மகாராஷ்டிரா

## விவசாயத்தால் கோடிகளில் வருமானம் பெற்ற இளைஞன்



மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த பிரமோத் கௌதம் என்ற நபர், பன்னாட்டு நிறுவனம் ஒன்றில் ஓட்டோமொபைல் பொறியியலாளராகப் பணியாற்றி வந்தார். ஆனால், அந்த வேலை அவருக்கு மன நிறைவை கொடுக்கவில்லை. அதனால் குடும்பச் சொத்தாக தன் பெயரில் உள்ள 26 ஏக்கர் விவசாய நிலத்தில் விவசாயம் செய்தார்.

அந்த வகையில் முதலில் கடலை மற்றும் மஞ்சள் போன்றவற்றை பயிர் செய்தார். அதில் பெரிய அளவுக்கு இலாபம் எதுவும் கிடைக்கவில்லை. அதனால் பாசிப்பயறு செய்ய தொடங்கினார். கௌதம், உற்பத்தி செய்த பாசிப்பயறுக்கு நாக்பூரில் நல்ல வரவேற்பு கிடைத்தது. அதைத் தொடர்ந்து, 'வந்தனா ஃபுட்ஸ்' என்ற பெயரில் பருப்பு மற்றும் தானியங்களை விற்பனை செய்வதற்கான ஆலையை தொடங்கினார். அவருடைய பிராண்ட் இப்போது 'ஃபிளிப்கார்ட்', 'அமேசான்' வாயிலாக நாடெங்கிலும் விற்பனைக்கு கிடைக்கிறது. பெரும் பொறியியலாளர்களைக் காட்டிலும் இந்த விவசாயினுடைய வருமானம் பன்மடங்கு கூடுதலாக இருக்கிறது என்று மனநிறைவுடன் கூறுகிறார்.

## புதுடெல்லி

## ஜி-20 மாநாடு; பிரகதி மைதானத்தில் புகுந்த வெள்ளம்




புது டெல்லியில் பெய்த கனமழையால் ஜி-20 மாநாடு நடைபெற்ற பிரகதி மைதானத்தில் மழைநீர் சூழ்ந்த காட்சி தற்போது பேசுபொருளாகி வருகிறது.

இதுதொடர்பான வீடியோ காட்சியை தனது 'எக்ஸ்' பக்கத்தில் பகிர்ந்துள்ள காங்கிரஸ் கட்சி, ஜி-20 மாநாட்டுக்கான ஏற்பாடுகளை 2 ஆயிரத்து 700 கோடி ரூபாய் செலவில் செய்த நிலையில், ஒரு மழைக்கே தண்ணீர் புகுந்துவிட்டதாக குற்றஞ்சாட்டியுள்ளது. மேலும், வெற்று வளர்ச்சி அம்பலாகியுள்ளதாகவும் விமர்சித்துள்ளது. அதைத்தொடர்ந்து, பாரத் மண்டபத்தின் தென் பகுதியில் தேங்கியிருந்த மழை நீர், மோட்டார் பம்புகள் மூலம் அப்புறப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கேரளா

## சில்லறைகளை மட்டும் திருடிய நபர்



கேரள மாநிலம், கொல்லம்-சாமக்கடை வீதியில் ஏராளமான கடைகள் வரிசையாக இருக்கின்றன. அவற்றில் அடுத்தடுத்து இருந்த 4 கடைகளில் சம்பவத்தன்று, கடைகள் பூட்டப்பட்டிருந்த நிலையில், அங்கு வந்த மர்மநபர் கடைகளின் பூட்டை உடைத்து, கடைக்குள் புகுந்து திருட்டில் ஈடுபட்டுள்ளார்.

மறுநாள் கடைக்காரர்கள் கடையை திறக்க வந்தபோது, பூட்டு உடைக்கப்பட்டு கடை திறந்து கிடந்ததை பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளனர், மேலும் கடையில் கட்டுக் கட்டாக வைக்கப்பட்டிருந்த பணம் அப்படியே இருந்தது. அதே நேரத்தில் கடையில் இருந்த சில்லறை காசுகள் அனைத்தும் திருட்டு போயிருந்தன.

இதுகுறித்து பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், ஒரு கடையில் இருந்த சி.சி.டி.வி கமெராவில் பதிவாகியிருந்த வீடியோ காட்சிகளை கைப்பற்றி ஆய்வு செய்தனர். அப்போது ஒரு நபர் பூட்டை உடைத்து கடைக்குள் செல்வதும், அந்த நபர் கடையின் உள்ளே மேசையில் வைக்கப்பட்டிருந்த பணக்கட்டை தனியாக எடுத்து வைத்து விட்டு, சில்லறை காசுகளை மட்டும் திருடிச்சென்றது போன்ற காட்சிகள் பதிவாகியிருந்தன.

பொதுவாக திருட்டில் ஈடுபடக்கூடிய நபர்கள், திருடச்செல்லும் இடத்தில் பணம் மற்றும் அதிக விலை உள்ள பொருட்கள் சிக்கினால் அவற்றை விட்டு வைப்பதில்லை. ஆனால், கொல்லம் கடைகளில் கை வரிசை காட்டிய நபரோ, வித்தியாசமாக பணக்கட்டுகளை வைத்துவிட்டு சில்லறை காசுகளை மட்டும் திருடிச் சென்றிருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

ஐ. அமெரிக்க பகிரங்க தொடரில்

# மார்கரட் கோர்ட்டின் சாதனையை சமப்படுத்திய ஜோக்கோவிச்



ஐக்கிய அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில் சம்பியனாகிய உலகின் தற்போதைய முதல்நிலை வீரரான நொவக் ஜோக்கோவிச், அதிக கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற அவுஸ்திரேலியாவின் மார்கரட் கோர்ட்டின் சாதனையை சமப்படுத்தியுள்ளார்.

நேற்று அதிகாலை நடைபெற்ற உலகின் இரண்டாம் நிலை வீரரான டனில் மெட்வடவ்வுடனான இறுதிப் போட்டியில் 6-3, 7-6 (7-5), 6-3 என்ற நேர் செட்களில் வென்று தனது 24ஆவது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்றே கோர்ட்டின் சாதனையை 36 வயதான ஜோக்கோவிச் சமப்படுத்தியுள்ளார்.

அம்பாறை நகர சபை மைதானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட

## டென்னிஸ் விளையாட்டுத் திடல் திறந்து வைப்பு



பாறுக் ஷிஹான்

அம்பாறை நகர சபை மைதானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட டென்னிஸ் விளையாட்டுத் திடலானது உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிர்மாணிக்கப்பட்ட புதிய டெனிஸ் திடல் அம்பாறை நகர சபை நிர்வாகத்திடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டதுடன் டென்னிஸ் விளையாட்டு துறையின் அபிவிருத்தி மற்றும் எதிர்கால முன்னெடுப்புகள் குறித்தும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

## சமநிலையில் சென். பற்றிக்ஸ் – கேட்வே போட்டி



அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனம் நடாத்தும் 20 வயதுப் பிரிவு முதற் தர-பாடசாலைகளுக்கிடையேயான கால்பந்தாட்டத் தொடரில், சென். பற்றிக்ஸ், கொழும்பு கேட்வே-கல்லூரிக்குமிடையிலான போட்டியானது 0 - 0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டு அணிகளும் அடுத்த சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## கிண்ணியா அஸ் ஸபா வித்தியாலய றிப்னாஸ் வரலாற்றுச் சாதனை



ஒலுமுதீன் கியாஸ்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான 18 வயதுக்குட்பட்ட டைக்வொன்டோ போட்டியில், கிண்ணியா அஸ் ஸபா வித்தியாலய எம். எம். றிப்னாஸ் மூன்றாமிடத்தைப் பெற்று கிண்ணியா மண்ணுக்கும், பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் டைக்வொன்டோ போட்டியில் கிடைத்த முதல் மூன்றாமிடம் இது என்பது குறிப்பிடத்தக்கது.



யாழ். சென். பற்றிக்ஸின் டென்னிஸ்:

## சம்பியனாகிய றிஸாந்த், கசோன், நிதீஸ்

அஸ்ஹர் இப்றாஹிம்

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் டென்னிஸ் விளையாட்டை மாணவர்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தி, மாணவர்களிடையே மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் நடைபெற்ற டென்னிஸ் தொடரில் தரம் 6 பிரிவில் ஏ.ஜி. றிஸாந் சம்பியனாகவும், எஸ். றஜிந்தன் இரண்டாமிடத்தையும், எஸ். பிராயன் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

தரம் 7 பிரிவில் வீ. கசோன் சம்பியனாகவும், எஸ். டினூஸாந் இரண்டாமிடத்தையும், ஜே.என். ரெரோன் மூன்றாமிடத்தையும் பெற்றனர். தரம் 8 பிரிவில் ஆர். நிதீஸ் சம்பியனாகவும், சீ. எபினேஸ் இரண்டாமிடத்தையும், ஜே. சந்தோஸ் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 12 செப்டெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.